ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

# திருமங்கையாழ்வார் அருளிச்செய்த
# ॥ திவளும் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ திவளும் ॥

## திருவிடவெந்தை

‡திவளும் வெண் மதி போல் திரு முகத்தரிவை⋆
செழுங்கடல் அமுதினில் பிறந்த
அவளும்⋆ நின் ஆகத்திருப்பதும் அறிந்தும்⋆
ஆகிலும் ஆசை விடாளால்⋆
குவளையங்கண்ணி கொல்லியம் பாவை⋆
சொல்லு நின் தாள் நயந்திருந்த
இவளை⋆ உன் மனத்தால் என் நினைந்திருந்தாய்⋆
இடவெந்தை எந்தை பிரானே (1)

துளம் படு முறுவல் தோழியர்க்கருளாள்⋆
துணை முலை சாந்து கொண்டணியாள்⋆
குளம் படு குவளைக் கண் இணை எழுதாள்⋆
கோல நல் மலர் குழற்கணியாள்⋆
வளம் படு முன்நீர் வையம் முன் அளந்த⋆
மால் என்னும் மால் இன மொழியாள்⋆
இளம் படி இவளுக்கென் நினைந்திருந்தாய்⋆
இடவெந்தை எந்தை பிரானே (2)

சாந்தமும் பூணும் சந்தனக் குழம்பும்⋆
தட முலைக்கணியிலும் தழலாம்⋆
போந்த வெண் திங்கள் கதிர் சுடர் மெலியும்⋆
பொரு கடல் புலம்பிலும் புலம்பும்⋆
மாந்தளிர் மேனி வண்ணமும் பொன்னாம்⋆
வளைகளும் இறை நில்லா⋆ என்தன்
ஏந்திழை இவளுக்கென் நினைந்திருந்தாய்⋆
இடவெந்தை எந்தை பிரானே (3)

www.prapatti.com

ஊழியில் பெரிதால் நாழிகை! என்னும்⋆
    ஒண் சுடர் துயின்றதால்! என்னும்⋆
ஆழியும் புலம்பும்! அன்றிலும் உறங்கா⋆
    தென்றலும் தீயினில் கொடிதாம்⋆
தோழியோ! என்னும் துணை முலை அரக்கும்⋆
    சொல்லுமின் என்செய்கேன் என்னும்⋆
ஏழை என் பொன்னுக்கென் நினைந்திருந்தாய்⋆
    இடவெந்தை எந்தை பிரானே (4)

ஓதிலும் உன் பேர் அன்றி மற்றோதாள்⋆
    உருகும் நின் திருவுரு நினைந்து⋆
காதன்மை பெரிது கையற உடையள்⋆
    கயல் நெடுங்கண் துயில் மறந்தாள்⋆
பேதையேன் பேதை பிள்ளைமை பெரிது⋆
    தெள்ளியள் வள்ளி நுண் மருங்குல்⋆
ஏதலர் முன்னா என் நினைந்திருந்தாய்⋆
    இடவெந்தை எந்தை பிரானே (5)

தன் குடிக்கேதும் தக்கவா நினையாள்⋆
    தடங்கடல் நுடங்கெயில் இலங்கை⋆
வன் குடி மடங்க வாள் அமர் தொலைத்த⋆
    வார்த்தை கேட்டின்புறும் மயங்கும்⋆
மின் கொடி மருங்குல் சுருங்க மேல் நெருங்கி⋆
    மென் முலை பொன் பயந்திருந்த⋆
என் கொடி இவளுக்கென் நினைந்திருந்தாய்⋆
    இடவெந்தை எந்தை பிரானே (6)

உளம் கனிந்திருக்கும் உன்னையே பிதற்றும்⋆
    உனக்கன்றி எனக்கன்பொன்றிலளால்⋆
வளங்கனிப் பொழில் சூழ் மாலிருஞ்சோலை⋆
    மாயனே! என்று வாய்வெருவும்⋆
களங்கனி முறுவல் காரிகை பெரிது⋆
    கவலையோடவலம் சேர்ந்திருந்த⋆



www.prapatti.com

இளங்கனி இவளுக்கென் நினைந்திருந்தாய்⋆
    இடவெந்தை எந்தை பிரானே (7)

‡அலம் கெழு தடக்கை ஆயன் வாய் ஆம்பற்கு⋆
    அழியுமால் என் உள்ளம்! என்னும்⋆
புலம் கெழு பொரு நீர்ப் புட்குழி பாடும்⋆
    போதுமோ நீர் மலைக்கென்னும்⋆
குலம் கெழு கொல்லி கோமள வல்லிக்⋆
    கொடி இடை நெடு மழைக் கண்ணி⋆
இலங்கெழில் தோளிக்கென் நினைந்திருந்தாய்⋆
    இடவெந்தை எந்தை பிரானே (8)

பொன் குலாம் பயலை பூத்தன மென் தோள்⋆
    பொரு கயல் கண் துயில் மறந்தாள்⋆
அன்பினால் உன்மேல் ஆதரம் பெரிது⋆ இவ்
    வணங்கினுக்குற்ற நோய் அறியேன்⋆
மின் குலா மருங்குல் சுருங்க மேல் நெருங்கி⋆
    வீங்கிய வன முலையாளுக்கு⋆
என்கொலாம் குறிப்பில் என் நினைந்திருந்தாய்⋆
    இடவெந்தை எந்தை பிரானே (9)

‡அன்னமும் மீனும் ஆமையும் அரியும்
    ஆய⋆ எம் மாயனே! அருளாய்⋆
என்னும் இன் தொண்டர்க்கின் அருள் புரியும்⋆
    இடவெந்தை எந்தை பிரானை⋆
மன்னு மா மாட மங்கையர் தலைவன்⋆
    மானவேல் கலியன் வாய் ஒலிகள்⋆
பன்னிய பனுவல் பாடுவார்⋆ நாளும்
    பழவினை பற்றறுப்பாரே (10)

॥ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ॥

www.prapatti.com